மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# மறைமொழி

முனைவர் சே செந்தமிழ்ப்பாவை
பேராசிரியர் – இயக்குநர், தமிழ்ப்பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

தொல்காப்பியர் நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்ததை மறைமொழி என்பர். வள்ளுவரும் நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் என்பர். இதற்கு உரை வரைந்த பரிமேலழகர் மறைமொழி என்பது அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்துவிடும் இயல்பினது எனப் பொருளுரைப்பர். இதனால் சான்றோர் எண்ணியவண்ணம் செயற்படுதற்குரிய ஆற்றல் முழுவதும் தண்கண் வாய்க்கப்பெற்ற மொழி மறைமொழி என்பது புலனாகும். இம்மறைமொழி தமிழ் இலக்கியங்களில் அமைந்திருக்குமாற்றை விளக்குவது இவ்வுரையின் நோக்கமாகும்.

## மறைமொழியின் இயல்புகள்

நிறைமொழி மாந்தரது ஆணையின் ஆற்றல் அனைத்தையும் தன்னகத்தே மறைத்துக்கொண்டுள்ள மொழி மறைமொழியாகும். இதனை வாய்மொழி என்றும் தொல்காப்பியர் உரைப்பர். இது பெரும்பாலும் சபித்தற் பொருட்டாகவே வரும் என்பர் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் (தொல்.பொருள்.உரைவளம். ப.878). அவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் சான்றோர் தம் மறைமொழி வெகுண்டு கூறல், அருளிக் கூறல், வெகுண்டு அருளிக் கூறல் என்னும் மூவகையில் அமைந்தன.

## வெகுண்டு கூறல்

மறைமொழி எனத் தொல்காப்பியர் கூறும் இவ்வழக்காறு சங்க இலக்கியத்தில் ஈரிடத்தில் இடம் பெற்றுள்ளன. மக்கள் தமக்கு ஏற்பட்ட தீங்கிற்காக இந்நிலையை எனக்குக் கொடுத்து விட்டாயே என்று இறைவனையே வெகுண்டு கூறிச் சபிக்கின்ற வழக்கை,

"இரும்புனிற்று எருமைப் பெருஞ்செவி குழவி'
.....................................................................

மாயிருந் தாழி கவிப்பத்

தாவின்று கழிகஎற் கொள்ளாக் கூற்றே" (நற்.271)

என்ற நற்றாயின் கூற்று விளக்கும். இதில் தன்னுடைய மகள் உடன்போக்கு மேற்கொண்ட நிலையில், செழுமையும் குளிர்ச்சியும் நிறைந்த மாளிகையில் எம்மை மட்டும் விடுத்துத் தன்னுடன் வருகின்ற பெரிய காளை போன்ற தலைவன் கூறும் அளவு கடந்த பொய் பொழியாலே மயங்கி, நெடுந்தூரத்திலுள்ள அவனது நாட்டை அடைய விரும்பி நெய்தல் மலர் போல மையுண்ட கண்ணையுடைய என்மகள் சென்று விட்டாள். இங்ஙனம் அவள் போவதற்கு முன்பே என்னைப் பெரிய கூற்றமானது தான் வலியிழந்து தன்னை அந்தத் தாழியிலிட்டுக் கவிக்கும்படி இறந்தொழிவதாக என்று நற்றாய் சபிக்கும் நிலை காணப்படுகிறது.

மற்றொரு பாடலில் தலைமகனொருவன் வஞ்சிப் போர் நிகழ்த்திக் காட்டில் இறந்து பட்ட நிலையில் இதையறிந்த அவனது மனைவி, அவன் வீழ்ந்த இடத்திற்குச் சென்று கணவனைக் கண்டு, அன்ப நின்னைக் கண்டு வருந்தும் யான் ஐயோ என வாய்விட்டுக் கதறியழுவேன். அந்த ஓசை கேட்டுக் காட்டிலுள்ள புலிகள் வந்துநின் உடலைக் கொண்டு போய்விடும். பின்பு யான் அதனையுங் காணப் பெறாது ஒழிவேன். இந்த அச்சத்தால் கதறிப் புலம்பவும் இயலவில்லை. நின்னை எடுத்துக்கொண்டு போகலாமே எனின் நினது அகன்ற மார்பு பெரிதாகையால் என்னால் இயலாது; ஒரு தீங்கும் செய்தறியாத என்னை இப் பெருந்துயரத்துள் அழுத்தி நடுக்கமுறச் செய்த கூற்றம் என்னைப் போலப் பெருந்துன்பம் உறுவதாக (புறநா.255) என்று கூற்றுவனுக்குச் சாபமிடுகிறாள்.

**நீலியின் சாபம்**

சிலம்பில் கோவலன் முற்பிறவியில் பரதன் என்ற பெயருடன் வாழ்ந்தபொழுது சங்கமன் என்னும் வணிகனை ஒற்றன் என்று அரசனிடம் கூறி அவனைக் கொலை செய்வித்தான். இதனை அறிந்த சங்கமனின் மனைவி நீலி என்பாள் நீதி கேட்டு அரற்றிப் பதினான்காம் நாளில் கணவனைக் கூடும்போது,

"எம்முறு துயரஞ் செய்தோர் யாவதும்

தம்முறு துயரமிற் றாகுக என்றே" (சிலப்.23: 168-169)

என்று பரதனுக்குச் சாபமிட்டாள். அவளிட்ட சாபத்தாலேயே கோவலனும் மறுபிறவியில் பொய்மைக் குற்றம் சுமத்தப்பட்டுக் கொலைக்களப்பட்டான்.

**காயசண்டிகை சாபம் பெற்றமை**

மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெறும் ஒரு பெண் மாந்தர் காயசண்டிகை. வித்தியாதரப் பெண்ணான காயசண்டிகை, தன் கணவன் காஞ்சனனுடன் பொதிகைக்கு மலைவளம் காண்பதற்கான வந்தாள். வந்த இடத்தில் விருச்சிக முனிவர் உண்பதற்காக வைத்திருந்த நாவற் பழத்தைச் சிதைத்ததால் முனிவரின் சாபத்திற்கு ஆளானாள். இதனை உலக அறவி புக்க (மணி:17. 28-47) காதை விளக்கும். இதில் சாபத்தின் காரணமாகக் காயசண்டிகைக்கு யானைத்தீ நோய் ஏற்பட்டது. எவ்வளவு சாப்பிட்டாலும் அவளது பசி அடங்காத நிலை உருவானது. இதில் விருச்சிக முனிவரின் வெகுளி, சாபமாக வெளிப்பட்டுள்ளது.

**அருளிக் கூறல்**

மறைமொழியாகிய அருளிக் கூறல் அருளாளர் தம் வாய்மொழியில் சிறப்புற வெளிப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் மங்கையர்க்கரசியின் கணவனான கூன்பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கப் பாடியதும், மயிலாப்பூரில் சிறு வயதில் இறந்து போய்க் குடத்திற்குள் சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை அப்பொழுதிற்குரிய வயது, இளமை அழகோடு உயிர் பெறச் செய்ய,

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் ஒருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" (திருஞான.ச.தேவரா.502)

என்று பாடியதும் அவர் தம் அருளியல் மொழியை விளக்கும். நாவுக்கரசர் பாம்பு தீண்டி இறந்த அப்பூதி அடிகளின் மகனை உயிர்பெற்று எழச் செய்தமை, சுந்தரர் அவிநாசியில் முதலை உண்ட பாலனை "கரைவாய் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று பாடி உயிர்பெறச் செய்தமை, மணிவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைத்தமை, சேந்தனார் தில்லையில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்தமை, திருமிழிசையாழ்வாரும் அவருடைய சீடர் கணிகண்ணனும் அரசனது ஆணைக்கிணங்க ஊரைவிட்டுச் செல்லும் போது திருமழிசையில் உள்ள திருமாலை,

"கணிகண்ணன் போகின்றான் காமரும் பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயும் உன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்" (தமிழ். இ. வரலாறு.ப.335)

என்று பாடித் தன் பின்னே வரச் செய்த நிலையில், உண்மை உணர்ந்த மன்னன் அஞ்சித் திருமழிசை ஆழ்வார் காலில் வீழ்ந்து வணங்க, "பைநாகப் பாய் விரித்துக் கொள்" என்று இறைவனை மீண்டும் இடம்பெறச் செய்தமை போன்றவை எல்லாம் நிறைமொழி மாந்தரின் அருளிக் கூறல் என்னும் மொழியில் அடங்கும்.

**வெகுண்டு அருளிக் கூறல்**

சான்றோர்கள் கோபத்தில் வெகுண்டு சபித்தபோதிலும் கோபம் இருக்கும் இடத்தில்தான் குணமிருக்கும் என்பதற்கேற்பச் சபித்தவர்கள் மீது கருணைகொண்டு சாபநீக்கத்தையும் உரைத்துள்ளனர். இதனை இரு சான்றுகள் விளக்கும்.

கோவலன் கண்ணகியுடன் பூம்பொழிலில் இருந்த கவுந்தியடிகளிடம் வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் அணுகி கோவலனையும், கண்ணகியையும் இவர் தாம் யாரென்று வினவ, அவரும் எம்மக்கள் என்றார். அவர்களோ ஒரு தாய் வயிற்றில் உடன் பிறந்தவர் கொழுநனும் மனைவியுமாய் வாழ்வது உண்டோ? என்று அடிகளை இகழ்ந்து உரைத்தனர். இது கேட்ட கவுந்தியடிகள் அவர்களை முள்ளுடைக் காட்டில் முது நரி ஆகும்படிச் சபித்தார். அவர்களும் நரிகளாக மாறினர். கண்ணகியும் கோவலனும்

அக்கயவர்க்கிரங்கிச் சாபவிடை செய்தருள வேண்டினர். கவுந்தியடிகளும் இவ்விருவரும் உறையூரின் மதிற்புறத்தே உள்ள காவற்காட்டில் பன்னிருதிங்கள் நரிகளாகவே திரிந்து யாம் இன்ன பிழை செய்தோம், இவ்வழிப்பிறப்புற்றோம் என்னும் நினைவுடையவராய் அந்நினைவு காரணமாகத் துன்பத்தையும் நுகர்ந்ததன் பின் பழைய மாக்கள் உருவத்தைப் பெறுவராக என்று வெகுண்டு சபித்தவர், அதற்குரிய உய்தியையும் எடுத்துரைப்பதைச் (சிலப்.10:215-245) சிலப்பதிகாரம் உரைக்கும்

பேராசிரியர் ''நிறைமொழி மாந்தர்'' என்று தொடங்கும் தொல்காப்பிய செய்யுளியல் நூற்பாவிற்கு (171) வரைந்த உரையில் நக்கீரர் தமிழை அவமதித்தும், வடமொழியை உயர்த்தியும் பேசிய வேட்கோக்குயக் கோடன்மீது வெகுண்டு அவன் சாவதற்கு.

''முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி- யரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்கசுவா கா'' (தொல்.பொருள்.உரைவளம் ப.878)

என்ற பாடலைப் பாடியதையும், பிழைத்தெழ

''ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் - சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா'' (தொல்.பொருள்.உரைவளம்.ப.879)

என்று பாடியதையும் எடுத்துரைப்பர். இதில் நக்கீரரின் வெகுளியால் ஏற்பட்ட சாபமும், உயிர்பெற்று வாழுமாறு உரைத்த அருளும் வெளிப்பட்டுள்ளன.

**முடிவுரை**

தொல்காப்பியர் மறைமொழி எனும் சொல் வழக்குக் குறித்துச் செய்யுளியலுள் குறிப்பிடுகின்றார். இது நிறைமொழி மாந்தரால் கிளக்கப்படும் வாய்மொழியாகும். இம்மறைமொழி சபித்தற் பொருட்டாக வரும் என்பது உரையாசிரியர்களின் கருத்தாகும். ஆனால் இலக்கியங்களில் இம்மறைமொழி வெகுண்டு சபித்தல் என்பதாக மட்டுமின்றி, துயரம் மிகுந்த சூழலில் வேறு வழியற்ற நிலையில் பிறருடைய துயரங்கண்டு அருளிக் கூறுவதாகவும், சில வேளைகளில் வெகுண்டபோதிலும் இரக்கத்துடன் அருளிச் சாபத்தை மாற்றுவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கற்புக்கடம் பூண்ட மகளிர், துறவிகள், இறையடியார்கள், தமிழ்ச்சான்றோர் போன்றோர் இந்நிறைமொழியாகிய மறைமொழியை உரைக்கும் மாந்தர்களாக விளங்குதல் சுட்டுதற்குரியது.